மாகாண கல்வித் திணைக்களம் - சப்ரகமுவ – பாடக்குறிப்பு

தரம் - 10

தேர்ச்சி – 2 வணிகச் சூழல்

பாடம் - வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

தயாரிப்பு:
செல்வி. வி. சர்மலி ,BBA (Hons)
கே/தெஹி/ஸ்ரீ கதிரேசன் த.ம.வி,
தெரணியகல.

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

# 2.1 வணிக சூழலும் வணிகச் செயற்பாடும்


வணிகமொன்றின் செயற்பாடுகளின் போது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்கத்தை ஏற்பாடுத்தக்கூடிய பல்வேறு காரணிகளினால் செயற்படும் சூழல் **வணிக சூழல்** எனப்படும்.

வணிகமொன்று வெற்றியடைவதற்கு வணிகச்சூழல் தொடர்பாக எப்பொழுதும் கவனம் செலுத்துவது மிக முக்கியமானதாகும்.சூழற் காரணிகளில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களையும் அதனால் ஏற்படும் பல்வேறு போக்குகளையும் இனங்காண்பதன் மூலம் புதிய வணிக வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

- அகச் சூழல்
- புறச் சூழல்

வணிகமொன்றின் மீது அதன் அகச்சூழல் மற்றும் புறச்சூழல் போன்ற பல்வோறு பிரிவினர்களும் பல்வேறு காரணிகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன.அனைத்து சூழல் பிரிவினர்களும் வணிகத்தின் மீது சாதாகமான, பாதாகமான தாக்கங்களை ஏற்படத்தகக்கூடியவையாகும். எனவே வணிக நிறுவனங்கள் எப்போதும் இச்சூழல் மாற்றங்களை கவனம் செலுத்துவதன் மூலம் வெற்றியடைந்துக்கொள்ள முடியும்.

உதாரணம் :
உங்களை சுற்றியும் உங்கள் மீது அக்கறை செலுத்தும் பல பிரிவினர்கள் காணப்படுவார்கள். உதாரணமாக உங்கள் தாய், தந்தை, சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள் என பலர் காணப்படுவார்கள். ஒரு வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்களாக பின்வருவோர் காணப்படுவர்கள் : உரிமையாளர், முகாமையாளர், வழங்குனர், சட்டச்சூழல் .........
கீழே உள்ள படங்களின் மூலம் நீங்கள் சூழல் காரணிகளை பற்றிய தெளிவான விளக்கத்தை பெற்றுக்கொள்ளலாம்.



## அகச்சூழலுக்கு உரித்தான பிரிவினர்களும் அப்பிரிவினர்களால் வணிகத்தில் ஏற்படும் தாக்கங்களும்

### ஊழியார்கள்

தனது அறிவு, திறன் என்பவற்றை பயன்படுத்தி ஒப்படைக்கப்பட்ட வணிக கருமங்களை நிறைவேற்றும் நபர்கள்.

**தாக்கம் :**

சாதக மனப்பாங்கு அர்ப்பணிப்பும் வணிகமொன்றின் வெற்றிக்குக் காரணமாக அமையும்.

### உரிமையாளர்கள்

வணிகத்தில் மூலதனத்தை ஈடுபடுத்துபவராக இருப்பார்.

**தாக்கம் :**

உரிமையாளர்களின் நிதிப்பலம், வணிக அறிவு, அனுபவம் என்பன வணிகமொன்றின் வெற்றிக்கு காரணமாக அமையும்.

### அகச் சூழல்

வணிகச் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அச்செயற்பாட்டில் ஈடுபடும் பல்வேறு பிரிவினர்களும் வணிகத்தில் காணப்படும் ஏனைய காரணிகளும் அகச்சூழல் ஆகும்.

### முகாமையாளர்கள்

வணிக நடவடிக்கைகளைக் செயற்படுத்தும் உரிமையாளர்களின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் நபர் ஆவார்.

**தாக்கம் :**

வணிகமொன்றின் வாடிக்கையாளருக்கும் பணியாளர்களுக்கும் இடையிலான சிறந்த தொடர்பானது முகாமையாளர்கள் மூலமே கட்டியெழுப்பப்படுகின்றது.

**சம்பவம் :1**

கமல் தன்னிடம் இருந்த ரூ.500000 பயன்படுத்தி சில்லறை கடை ஒன்றை ஆரம்பித்தார். தன்னிடம் உள்ள வளங்களை சரியாக ஒழுங்கமைப்பதற்காக குமாரையும், சில்லறை கடைக்கு வரும் வாடித்கையாளர்களுக்கு பொருட்களை வழங்குவதற்காக விமலையும் வேலைக்கு அமர்த்தினார்.

இதன் அடிப்படையில் கமல் வணிகத்தின் அகச்சூழல் காரணிகள்

- உரிமையாளர் : கமல்
- முகாமையாளர் : குமால்
- ஊழியார் : விமல்

## புறச்சூழல் காரணிகளும் அக்காரணிகளால் வணிகத்தில் ஏற்படும் தாக்கங்களும்.

### போட்டியாளர்கள்

யாதேனும் வணிகமொன்றில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி பொருளுக்கு சமமான பொருட்களை உற்பத்தி செய்து சந்தை படுத்துபவர்கள்.

**தாக்கம்**

போட்டியாளர்களின் உற்பத்திகளின் விலைகள், தரத்தின் தன்மைகள் வணிக செயற்பாட்டியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

### வழங்குனர்கள்

வணிகத்திற்கு தேவையான பல்வேறுபட்டவைகளை வழங்குவோர்.

**தாக்கம்**

தரமான பொருட்கள் , சேவையினை தொடர்ச்சியாக உரிய நேரத்திற்கு பெற்றுக்கொள்ளல்.

### வாடிக்கையாளர்கள்

வணிகத்திலிருந்து பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யும் நபர்கள்.

**தாக்கம்**

வாடிக்கையாளரின் விருப்பங்களின் மாற்றங்கள்

இவர்களின் கொள்வனவு போக்கயில் ஏற்படும் மாற்றம்.

### சட்டச்சூழல்

அரசினால் விதிக்கப்படுகின்ற சட்ட விதிகள், ஒழுங்கு முறைகள் என்பன சட்டச்சூழலில் அடங்கும். அனைத்து வணிகங்களும் கட்டயமாக பின்பற்ற வேண்டும்.

**உதாரணம்:**

2007 ஆம் ஆண்டு 7 இலக்க கம்பனி சட்டம்

### அரசியற்சூழல்

நாடொன்றின் பொருளாதார விருத்திக்குத் தேவையான கொள்கைகளை வகுப்பது

**தாக்கம்**

அரசின் நிலைப்புத் தன்மை.

ஊட்கட்டமைப்பு அபிவிருத்திகொள்கைகள்

தொழிலாளர் தொடர்பான கொள்கைகள்

### புறச் சூழல்

வணிகமொன்றின் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற , வணிகத்தின்றும் வெளியக ரீதியாகவும் செயற்படும் பிரிவினர் களும் ஏனைய காரணிகளும் புறச்சூழல் ஆகும்.

### தொழினுட்ப சூழல்

புதிய கண்டுபிடிப்புக்கள், ஆக்கங்கள் காரணமாக தொழினுட்பச் சூழலின் விருத்தி வணிகங்களின் நடவடிக்கை களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

உதாரணம்:

கணினியின் வளர்ச்சி, நனோ தொழினுட்ப அறிமுகம், எண்மானத் தொழினுட்ப முலமான உற்பத்தி முறைமை.

### பொருளாதாரச் சூழல்

வணிகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் பொருளாதாரக் காரணிகளை உள்ளடக்கிய சூழல்.

இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனை யின்படி அரசு தீர்மானிக்கும்.

**பொருளாதாரச்சூழல் காரணிகள்**

வட்டிவீதம் : வங்கிகடன், வங்கிவைப்புக்களுக்கான வட்டிவீதம்

பணவிக்கம் : பொருட்களின் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லல்.

வருமானப்பரம்பல் : நாட்டின் தேசிய வருமானம் மக்களிடையே பகிர்ந்தளிக்கப்படும் முறை

நிறைதொழில்மட்டம் :வேலை எதிர்பார்க்கும் அனைவருக்கும் பொருத்தமான வேலை பெறல்.

சேமிப்புக்கள் : சேமிப்பு அதிகரிக்கும் போது முதலீடு அதிகரிக்கும்.

### பூகோளமயச் சூழல்

உலக நாடுகளுக்கிடையே பொருளாதார, சமூக, கலாசாரம் எனும் வகையில் காணப்படும் நெருக்கமான தொடர்புகள் ஆகும்.

இதன் முலம் உலக நாடுகளுக்கிடையே வணிக நடவடிக்கைகளை சுகந்திரமாக மேற்கொள்ள முடிவதால் இச்சூழல் காரணி மாற்றங்கள் உள்நாட்டு வணிகங்களில் சாதகமான, பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

| சாதகமான விளைவுகள் | பாதகமான விளைவுகள் |
| --- | --- |
| 1.நவீன தொழில்நுட்பம் பெறல்<br>2.வெளிநாட்டு மூலதனம் பெறல்<br>3.வெளிநாட்டு சந்தை வாய்ப்பு பெறல் | 1.அதிக போட்டி தன்மை<br>2.பயிற்சிபெற்ற ஊழியர் வெளிநாடு செல்லல்<br>3.உள்நாட்டு கலாசாரம் பாதிப்படைதல். |

## 2.4 வணிகமொன்றின் சூழல்களை கற்பதன் முக்கியத்துவம்

வணிகமொன்றின் அக மற்றும் புறச் சூழல் காரணிகளும் சாதகமான அல்லது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் .எனவே அனைத்து வணிகங்களும் இச்சூழல் காரணிகளின் மாற்றத்தை கண்டு அறிந்து செயல்படுவதன் முலம் வெற்றியடைய முடியும்.

வணிகமொன்றின் அகச்சூழல் முலமாக பலம், பலவீனத்தையும் மற்றும் புறச் சூழல் மூலமாக வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்களையும் அறிந்துகொள்ளமுடியும். வணிகமொன்று ஆய்வுகள் மூலம் கண்டறிந்த பலம், வாய்ப்புக்களை சரியான முறையில் பயன்படுத்தியும், பலவீனம், அச்சுறுத்தல்களையும் இனம்கண்டு முகங்கொடுப்பதன் முலமாக வெற்றியடையலாம்.

கீழே காணப்படும் படத்தின் மூலமாக தெளிவான விளக்கத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

| | சாதகம் | பாதகம் |
|---|---|---|
| அகச் சூழல் | **பலம்**<br>• போதியளவான மூலதனம் காணப்படல்<br>• முகாமையாளரின் அனுபவம்<br>• பணியாளர்களின் விசேட திறன்<br>• புதிய உற்பத்தி முறை | **பலவீனம்**<br>• பயிற்சி பெற்ற ஊழியார்கள் இன்மை.<br>• உரிமையாளரிடம் நிதிப்பலம் இன்மை.<br>• நவீன தொழில் நுட்பம் இன்மை<br>• ஊழியார்களின் எதிர்மறை மனபாங்கு |
| புறச் சூழல் | **வாய்ப்புக்கள்**<br>• வணிகத்திற்கு வரிச் சலுகைகளை வழங்குதல்.<br>• கடன் வட்டி வீதம் குறைதல்.<br>• புதிய நகரங்களை உருவாக்குதல்.<br>• நுகர்வோரின் வாழ்க்கை பாங்கு மாற்றமடைதல். | **அச்சுறுத்தல்கள்**<br>• புதிய போட்டியாளர்கள் உருவாகுதல்.<br>• இயற்கை அனர்த்தங்கள்<br>• புதிய தொழினுட்பங்களை பயன்படுத்துவதில் சிரமங்கள் காணப்படல். |